# ஈப்போ உங்கு ஓமார் கல்லூரியின் 50 ஆவது பட்டமளிப்பு விழ

## தங்கப் பதக்கம் பெற்ற ஒரே இந்திய மாணவராக அல்பன் மணிமாற

Tamil Malar Daily
27 Ogos 2022

டிகே.மூர்த்தி
ஈப்போ ஆக 27–

நேற்று முன்தினம் 25–08–2022 இல் வியாழக்கிழமையன்று இங்கு அமைந்துள்ள பாலிடெக்னிக் உங்கு ஓமார் கல்லூரியின் 50 வது ஆண்டு பட்டமளிப்பு விழாவில், பொறியியல் தொழில்நுட்பத் துறையில், இளங்கலைப் பட்டதாரியான அல்பன் மணிமாறனே தங்கப் பதக்கம் பெற்றுள்ள ஒரே ஒரு இந்திய மாணவராகத் திகழ்கின்றார்.

நிலவில் காலடி எடுத்துவைப்பது மனிதனுக்கு ஒரு படி. ஆனால், மனிதக்குலத்திற்கு ஒரு மாபெரும் வசந்தம் என்றால், அது கல்வியில் வெற்றி என்பதே







என்று கூறிய தமிழ் மலர் குழுமத்தின் தலைவர் ஓம்ஸ் தியாகராஜன், பொறியியல் துறையில் தங்கப் பதக்கம் பெற்றிருக்கும் பினாங்கு மாநிலத்தைச் சேர்ந்த அல்பன் மணிமாறனுக்கு வாழ்த்துகளைக் கூறியுள்ளார்.

நிகழ்ச்சிக்குப் பின்பு அல்பன் மணிமாறன் தமிழ் மலர் நிருபரிடம் பேசுகையில், சவால்கள் நிறைந்த காலகட்டத்தில், கல்லூரி அளவில் 2,470 பேர் இளங்கலை பட்டம் பெற்றுள்ள பட்டதாரிகள் வரிசையில், பினாங்கு மாநிலத்தின் மண்ணின் மைந்தரான பட்டதாரி மாணவர் அல்பன், பொருளாதார வசதியில் தாம் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும் கூறினார்.

அவரின் தந்தை கிரேன் ஓட்டுநராகப் பணி புரிகின்றார் என்று கூறிய அல்பன், தமது தந்தை பெற்ற சிரமத்தை படக்கூடாது என்றே அவர் என்னுடைய கல்விக்கு உறுதுணையாக இருந்துள்ளார் என்றும் சிறந்த திட்டப் பணிக்கான விருதையும் பெற்றுள்ள அல்பன், ஆனந்தக் கண்ணீருடன் கூறினார்.

கடந்த ஆண்டு நாடு தழுவிய நிலையில் நடந்தேறிய (என்.சிடி.எஸ்) சிறந்த திட்டப் பணி போட்டியிலும் அவரே இரு முதன்மை விருதுகளுக்கு கதாநாயகனாக வலம் வந்துள்ளார். மேலும் அவர் கூறுகையில், கடந்த காலத்தில் தனது பட்டப்படிப்பின்போது சக மாணவர்கள் அளித்துள்ள ஒத்துழைப்பு என்பதானது நெஞ்சில் என்றென்றும் நீங்கா இடம் பெற்றுள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

ஒரு மாணவனின் வெற்றியை முதலாம் ஆண்டு வகுப்பில் கால்பதியும்போது நிர்ணயப்பதில்லை. ஆரம்பக் கல்வியில் ஒரு நடுத்தர மாணவராக இருந்த என்னால், தங்கப் பதக்கம் பெற்றுள்ள பட்டதாரி மாணவராக உருமாற்றம் பெற்றதற்கு நன்றியோடு கல்லூரி பேராசிரியர்களை நினைக்கின்றேன் என்றார்.மேலும், இந்த பட்டமளிப்பு விழாவில், தயாரிப்பு பொறியியல் துறையில் டிப்ளோமா கல்வியில் வெற்றி அடைந்துள்ளார் பத்துகாஜாவை சேர்ந்த பிரசாந் லிங்கம். இவர் தொடர்ந்து இளங்கலைப் பட்டப்படிப்புக்கான கல்வியை தொடர்வதாகவும் கூறியுள்ளார்.

பாலிடெக்னிக் உங்கு ஓமார் கல்லூரி கடந்த 1969 ஆம் ஆண்டு ஈப்போவில் தொடங்கப்பட்ட முதல் கல்லூரியாகும். அப்போது முன்னாள் பிரதமர் துன். அப்துல் ரசாக் கல்வி அமைச்சராக இருந்தார் என்பது வரலாறாகும். ஐந்து நாட்கள் வரை நடைபெற்று வரும் இந்த பட்டமளிப்பு விழாவிற்கு நேற்று முன்தினம், (25–08–2022) பாலிடெக்னிக் உங்கு ஓமார் கல்லூரியின் முன்னாள் தலைவரான ஹாஜி முகமது பைசால் ஹருன் தலைமையில் நடைபெற்றது.